## *ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்*
## *அவசரக் கூட்டம்*

**2020** ம் ஆண்டு **ஜீன்** மாதம் **05** ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **அவசரக்** கூட்ட நடவடிக்கைகள்.

***முன்னிலை :- திரு. ப. சத்தியநாதன் B.S.C,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 543**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2020-21 ன் கீழ் அட்டவணையில் காணும் மூன்று தார் சாலை பணிகள் ( ஒரு சிப்பம் ) ரூ.100.00 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு மதிப்பீட்டுப் பேராணை அனுப்பி வைப்பதற்கும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழில் விளம்பரம் செய்வதற்குரிய விளம்பர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | **ஒரு சிப்பம்** | |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 9 நல்ல குற்றாலபுரம், ரைட்டன் பட்டி தெரு, வார்டு எண் 27 சீனியாபுரம் தெரு, மார்ட்டின்புரம் தெரு, வார்டு எண் 28, திருமலாபுரம் கிழக்கு தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | **100.00** |

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 2602/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

## *ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்*
## *அவசரக்  கூட்டம்*

**2020** *ம் ஆண்டு* **ஜீன்** *மாதம்* **12** *ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல்* **4.00** *மணியளவில் நடைபெற்ற* ***அவசரக்*** *கூட்ட நடவடிக்கைகள்.*

***முன்னிலை :- திரு. ப. சத்தியநாதன் B.S.C,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 544**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரரட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்ற தீர்மான எண் 422 நாள் 18.02.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2020 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | ஒப்பந்தகாரார் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. அ. சடையப்பன், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ.4,06,000/- |
| 2 | திரு. எஸ். அழகர்சாமி, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ.4,00,000/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. அ. சடையப்பன்**, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 6099/2019/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 545**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரரட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பெருமாள்பட்டி மெயின் ரோடு கீழ்பக்கமுள்ள சமுதாய கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்ற தீர்மான எண் 472 நாள் 31.03.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2020 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர் | மாதம் ஒன்றிற்கான குத்தகை தொகை | ஒரு வருட குத்தகை தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. கா. பாத்திமா, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 8250/- | ரூ. 99000/- |
| 2 | திரு. எம். ரவிக்குமார், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 6250/- | ரூ. 75000/- |
| 3 | திரு. ஆர். முத்துக்குமார், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 6333/- | ரூ. 76000/- |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில் அதிகமான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பா. பாத்திமா, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 7284/2018/A3

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 546</u>**

உள்ளாட்சித் தேர்தல் 2011 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அச்சிட்டு வழங்கப்பட்ட இருப்பில் இருக்கும் தேர்தலுக்குமான வாக்குச் சீட்டுகள், தேர்தல் படிவங்கள், கையேடுகளை கழிவு செய்ய 10.06.2020 ம் தேதியில் பொது ஏலம் விடப்பட்டதில் பின்வரும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு. பி. செல்வம்,<br>த/பெ. பால்ராஜ்,<br>நகராட்சி அலுவலக சாலை, கூட்டுறவு சங்க கட்டிடம், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 10.20 / கிலோ ஒன்றுக்கு |
| 2 | திரு. ராஜா,<br>த/பெ. பாண்டி,<br>மேட்டுத் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ. 10.00 / கிலோ ஒன்றுக்கு |

திரு. பி. செல்வம் என்பவரின் கிலோ ஒன்றுக்கு ரூ.**10.20/-** உயர்ந்த ஏலக்கேள்வியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 2252/2019/C1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 547</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சின் 2019-20 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 2260/2020/C1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 548</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் கதவு எண் 169 கல்லணை ஓடைத் தெருவில் வசிக்கும் திரு. கா. திருப்பதி ராஜா என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார். நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்கு சொத்து மதிப்பு சான்று வருமானவரி சான்று, பொறியியல் சிவில் பட்டயப் படிப்பு தகுதி சான்று போன்ற ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். அன்னார் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் ஐந்தாம் நிலை ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்குரிய கட்டணத்தை செலுத்திடவும், பதிவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 2408/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 549**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் 2019-20 ம் ஆண்டிற்கான மத்திய மான்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.210.01 இலட்சம் ஆகும். மேற்படி திட்டத்தின் கீழ் அட்டவணையில் கண்டுள்ள 9 தார் சாலைப்பணிகள் ரூ.210.01 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு தெரிவு செய்து நகர்மன்றத் தீர்மான எண் 368 நாள் 06.01.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திவு வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 20 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கொளூர்பட்டி கிழக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 2 | 20 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கொளூர்பட்டி மேற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 3 | 6 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைத்தலைவாசல் கிழக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 4 | 6 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைத் தலைவாசல் மேற்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 24.50 |
| 5 | 32 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஞ்சப்பூ தெருவில் கிழக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 24.00 |
| 6 | 32 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஞ்சப்பூ மேற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 18.00 |
| 7 | 5 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மங்காபுரம் மெயின் ரோடு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 8 | 5 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மங்காபுரம் குறுக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 9 | 9 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ரைட்டன் பட்டி தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 18.51 |
| | | | **210.01** |

மேற்படி திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கப்படவுள்ள தெருக்களை நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் கள ஆய்வு செய்து தெருக்களுக்கேற்றபடி மாற்றம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொண்டால் மட்டுமே இத்திட்டத்தை முழுமையாக முடிக்க இயலும் என வழங்கிய அறிவுரைபடி கீழ்வரும் அட்டவணையில் கண்டுள்ள தெருக்கள் மற்றும் சாலையின் நீளத்திற்கேற்ற வகையில் தார் சாலைப்பணிகள் திருத்தியமைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சாலையின் நீளம் (மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 20 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கொளூர்பட்டி தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 501.00 | 25.00 |
| 2 | 16, 15 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் தெரு கிழக்கு தெரு மற்றும் மேற்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 225.00<br>125.80 | 25.00 |
| 3 | 6 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைத்தலைவாசல் கிழக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 418.00 | 25.00 |
| 4 | 6, 5 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைத்தலைவாசல் மேற்கு தெரு மற்றும் வெங்கடேஸ்வரபுரம் பெருமாள்பட்டி தெரு சார்சாலை அமைக்கும் பணி | 91.00<br>198.50 | 24.50 |
| 5 | 32 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஞ்சப்பூ மற்றும் திரௌபதியம்மன் கோவில் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி ( பகுதி ) | 303.80<br>30.00 | 24.00 |
| 6 | 32, 33 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திரௌபதி அம்மன் கோவில் தெரு கோவிந்தன் நகர் காலனி 1 வது தெரு மற்றும் பிள்ளையார் கோவில் கிழக்கு தெரு, பெரியசாமி கோவில் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 63.10<br>84, 80<br>85.00<br>64.20 | 18.00 |
| 7 | 4 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பெருமாள்பட்டி தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 407.00 | 25.00 |
| 8 | 25,31 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பெரிய பெருமாள் மேலமாடவீதி, நாச்சியார் வடக்கு மாடவீதி, நாச்சியார் மேல மாடவீதி ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 115.85<br>171.00<br>72.60<br>129.40 | 25.00 |
| 9 | 9 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ரைட்டன்பட்டி தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 450.00 | 18.51 |
| | | மொத்தம் | | **210.01** |

மேலே கண்டுள்ள திருத்திய தெருக்கள் மற்றும் சாலையின் நீளத்திற்கேற்ற வகையில் 9 தார் சாலைப் பணிகளை அதே மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 0052/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 550</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திரு.வி.க. மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் பேவல் கல் பதித்து, வடக்கு பக்கம் மழைநீர் வடிகால் வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20,00,000/- ற்கு கல்வி நிதியின் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் 449 நாள் 28.02.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண் 506 நாள் 30.04.2020 ம் தேதிய தீர்மானத்தின்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி திரு.வி.க. மேல்நிலைப்பள்ளியை நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோர் இடத்தை நேராய்வு செய்யும் போது பள்ளி வளாகத்தில் பேவல் கல் பதிப்பதற்கு பதிலாக வடக்கு பக்கம் உள்ள ஆய்வு கூட கட்டிடத்திற்கு பதில் புதிய கட்டிடம் கட்டித் தருமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் உதவி தலைமை ஆசிரியர் ஆகியோர் கோரிக்கை அளித்தனர். எனவே மேற்படி பள்ளியின் ஆய்வு கூட கட்டிடம் கட்டி சுமார் 30 ஆண்டுகள் பழமையானது என்பதால் அதனை இடித்து விட்டு மாணவர்களின் நலன் கருதி புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியரிடம் தொழில் நுட்ப அறிக்கை பெறுவதற்கும், தற்போது திரு.வி.க. பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் கல் பதித்து பணியை மாற்றி அதற்கு பதிலாக வார்டு எண் **29**, கம்மாப்பட்டி கிழக்கு, மேற்கு தெரு கல் பதிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார். பொது மக்களின் நலன் கருதி வார்டு எண் **29** கம்மாப்பட்டி கிழக்கு , மேற்கு தெரு மற்றும் வார்டு எண் **27** சீனியாபுரம் தெரு ஆகிய தெருக்களில் ரூ.20.00 இலட்ச மதிப்பீட்டில் பேவர் பிளாக் கல் பதிக்கும் பணியை நகராட்சி பொது நிதியின் கீழ் இதே ஒப்பந்தப்புள்ளியின்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 553/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 551</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி சுகாதாரபிரிவில் உள்ள லாரி வாகன எண் TN-67-V-7767 ல் பழுதடைந்துள்ள உள்ள 3 HP Oil Engine ஐ ரூ.22,500/- மதிப்பீட்டில் பழுது நீக்கி தர தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 30.04.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்படி வேலைக்கு 4.5.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | குமரன் டர்னிங் ஒர்க்ஸ்,<br>10, ஆர்.சி.சர்ச் தெரு, பி.கே.கே.எஸ். சமீபம்,<br>இராஜபாளையம். | 22650/- |
| 2 | ஸ்ரீ கிருஷ்ணா ரிவண்டர்ஸ்,<br>பெரிய கடை பஜார், ராஜபாளையம். | 23000/- |
| 3 | கௌசல்யா லேத் ஒர்க்ஸ்,<br>388-D, தென்காசி ரோடு, ராஜபாளையம். | 21950/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளும் ரூ.**21950/–** குறைவான விலை விகிதம் கௌசல்யா லேத் ஒர்க்ஸ் நிறுவனம் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
**ந.க.எண் 1951/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 552</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் கிணறு எண் 2,3,5, மற்றும் **6** Infiltration கிணறுகளை தூர் வாரி சீர் செய்யும் பணியை ரூ.1,50,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 531 நாள் 29.05.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரார் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.க. செந்தில்குமார்,<br>நகராட்சி ஒப்பந்தகாரார்,A 29/27,<br>இடைய பொட்டல் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.48 % குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன்,<br>நகராட்சி ஒப்பந்தகாரார்,<br>131 A/54, மேட்டு கடைசி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 5.65 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.48% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. க. செந்தில்குமார், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1984/2020/E1**

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 553</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் 1 முதல் 7 முடிய உள்ள Infiltration கிணறுகளில் **4** மற்றும் **7** ஆகிய இரு கிணறுகளை சரி செய்து பராமரிப்பு பணியை ரூ.4,50,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 503 நாள் 30.04.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரார் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.க. செந்தில்குமார்,<br>நகராட்சி ஒப்பந்தகாரார்,<br>A 29/27, இடைய பொட்டல் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.16 % குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன்,<br>நகராட்சி ஒப்பந்தகாரார்,<br>131 A/54, மேட்டு கடைசி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 4.26 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. க. செந்தில்குமார், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1986/2020/E1**

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 554</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் ஊரணிப்பட்டி நீர்தேக்க தொட்டி 4.00 இலட்ச மற்றும் பெருமாள்பட்டி நீர்தேக்க தொட்டி 5.00 இலட்சம் ஆகிய இரு நீர்தேக்க தொட்டிகளுக்கு நகராட்சி அலுவலக வடக்கு பக்கம் உள்ள தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யக் கூடிய 20 HP ( Vertical Submersible motor ) ஒரு எண்ணம் விநியோகம் செய்யும் பணியை ரூ. 1,80,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 499 நாள் 30.04.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் மூன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ராயல் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>73 H/A, ராமகிருஷ்ணாபுரம் பைபாஸ் ரோடு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.43 % குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன்,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>131 A/54, மேட்டு கடைசி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.05 % குறைவு |
| 3 | ரவுக்கால் அண்ட் கோ,<br>3, சியான் பில்டிங்ஸ்,<br>மிஷன் ஹாஸ்பிட்டல் காம்ப்ளக்ஸ்,<br>கிழக்கு வெளி வீதி, மதுரை-1. | -6.67 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும விலைவிகிதம் 6.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள ரவுக்கால் அண்ட் கோ மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1986/2020/E1**

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 555</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் செண்பகத்தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தண்ணீர் சேகரிப்பு திறந்த வெளி கிணறு அருகில் உள்ள திறந்த வெளி கிணறு மற்றும் குறவன் கோட்டை கண்மாய் அருகில் உள்ள திறந்த வெளி கிணறு ஆகிய இரண்டு திறந்த வெளி கிணறுகளில் 5 HP நீர் மூழ்கி மோட்டார் பொருத்தும் பணியை ரூ.5,00,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வற்கு நகர்மன்றத் தீர்மான எண் 502 நாள் 30.04.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.க. செந்தில்குமார்,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>A 29/27, இடைய பொட்டல் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.22 % குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன்,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>131 A/54, மேட்டு கடைசி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 3.49 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. க. செந்தில்குமார், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1986/2020/E1**

| | |
|---|---|
| **தீர்மானம் :-** | **அனுமதிக்கப்பட்டது.** |

**<u>பொருள் எண் : 556</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் கோட்டைப்பட்டி உயர்மட்ட நீர்தேக்க தொட்டியில் இருந்து அலுவலக வளாகத்தில் உள்ள 4 இலட்ச லிட்டர் தரைமட்ட தொட்டிக்கு வரும் HDPE பீடர் மெயின் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளதால் 300 MM HDPE PIPE இணைக்கப்பட்டு AIR VALVE Scover Value பொருத்தும் பணியை ரூ.6,60,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர் மன்றத் தீர்மான எண் 504 நாள் 30.04.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | Secretary,<br>RA 267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd,<br>64 A, Madavarvilagam Pillaiyar Kovil Street, Srivilliputtur. | 0.04 % குறைவு |
| 2 | Secretary,<br>SP.SPL. 177. Rajapalayam Agro Engg and Service Co-op Centre Ltd,24, Municipality shopping complex, Rajapalayam. | 7.77 % அதிகம் |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :-** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள RA267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op centre Ltd,Srivilliputtur ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| | **ந.க.எண் 1985/2020/E1** |
| **தீர்மானம் :-** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.** |

**பொருள் எண் : 557**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் 2020-21 ன் கீழ் நகர் பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் பீடர் லைனில் உள்ள வால்வுகளை சீர் படுத்தும் பணியை ரூ.3,50,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் நகர்மன்றத் தீர்மான எண் 534 நநள் 29.05.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரார் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | Secretary,<br>RA 267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd,<br>64 A, Madavarvilagam Pillaiyar Kovil Street,<br>Srivilliputtur. | 0.09 % குறைவு |
| 2 | Secretary,<br>SP.SPL. 177. Rajapalayam Agro Engg and Service Co-op Centre Ltd,<br>24, Municipality shopping complex,<br>Rajapalayam. | 2.06 % அதிகம் |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :-** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள RA267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op centre Ltd,Srivilliputtur ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| | **ந.க.எண் 1984/2020/E1** |
| **தீர்மானம் :-** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.** |

**பொருள் எண் : 558**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 K 0312 ( டிப்பர் லாரிக்கு ) தகுதிச் சான்று மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் நாள் 26.05.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 29.05.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

| | | விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| வ. எண் | வேலைகளின் விபரம் | Raj paul Auto Mobiles works, Near R.C Church By pass Road, Srivilliputtur. | ஸ்ரீ கிருஷ்ணா மோட்டார்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் to இராஜபாளையம் ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர். | J.S.P. Auto Mobiles works, Rajapalayam Road, Thirupakadal West, Srivilliputtur. |
| 1 | TN-67-K- 0312 ( டிப்பர் லாரிக்கு ) தகுதிச் சான்று பெறும் பணி | 45,000/- | 46,000/- | 47,000/- |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு:-** | 1). மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.61,800/- கொடுத்துள்ள Raj Paul auto mobiles works Near R.C. Church, By-Pass Road Srivilliputtur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

| | |
|---|---|
| | 2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>( ந.க.எண் 2199/20/H2) |
| **தீர்மானம் :-** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.** |

**<u>பொருள் எண் : 559</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN-67-K-1273 க்கு தகுதிச் சான்று பெறும் பணி முடிவடைந்து விட்டது. மேலும் தற்போது புதிதாக அரசு அறிவித்தபடி வண்டி எண் TN 67 K 1273 க்கு எலக்ட்ரானிக் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5500/ க்கு ( ஐந்தாயிரத்து ஐந்நூறு மட்டும் ) மன்ற பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 0797/2020/H2**

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 560</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அசோக் நகர் பகுதியில் தற்போது சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் சாலைபணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அத்தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லை. எனவே அமைக்கும் சாலையை மீண்டும் சேதப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளவும், பொது மக்களின் நலன் கருதியும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் புதியதாக அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/- ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2842/2020/E1**

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 561</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் உள்ள 2.00 இலட்ச கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டியில் உள்புறம் சுத்தம் செய்யும் பணியை ரூ.30,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்அவர்கள் 28.05.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 01.06.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கோ. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தகாரர், 54, மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 35000/- |
| 2 | திரு.க. செந்தில்குமார், நகராட்சி ஒப்பந்தகாரர், A 29/27, இடையபொட்டல் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 30000/- மதிப்பீட்டுத் தொகையில் |
| 3 | திரு. எம்.கே. ஜின்னா, நகராட்சி ஒப்பந்தகாரர், நந்தவனம் பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 32000/- |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :-** | வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.**30000/–** மதிப்பீட்டு தொகையில் விலைவிகிதம் திரு.க. செந்தில்குமார், என்பவர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். |
| | **ந. க. எண் 1121/2020/E1** |
| **தீர்மானம் :-** | **அனுமதிக்கப்பட்டது.** |

**பொருள் எண் : 562**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் தற்போது தண்ணீர் மட்டம் 150 அடிக்கு மேல் உள்ளதாலும் மழைப்பொழிவு குறைவாகி வருவதாலும், மழை பொழிவு காலத்தில் பெய்யும் மழையை நகரில் உள்ள பயன்படாத கீழ்வரும் 25 எண்ணிக்கையுள்ள ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,60,000/- ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | | வரிசை எண் | |
| 1 | மங்காபுரம் தெரு | 13 | மாரியம்மன் கோவில் கிழக்கு பகுதி |
| 2 | அய்யம்பட்டி தெரு | 14 | மாரியம்மன் கோவில் தெரு |
| 3 | பெருமாள்பட்டி வெங்கடேஸ்வரபும் தெரு | 15 | கல்லரை ரோடு |
| 4 | பெருமாள்பட்டி பிள்ளையார் கோவில் தெரு | 16 | டி.டி. ரோடு |
| 5 | ஆராய்ச்சிபட்டி பிள்ளையார் கோவில் தெரு | 17 | என்.ஜி.ஓ. காலனி |
| 6 | தைக்காப்பட்டித் தெரு | 18 | ஊரணிப்பட்டி தெரு |
| 7 | ரைட்டன்பட்டி ( வ.உ.சி. நகர்) | 19 | கூனங்குளம் புதுத் தெரு |
| 8 | ரைட்டன்பட்டி தெரு மெயின் ரோடு | 20 | கந்தாடைத் தெரு |
| 9 | அசோக் நகர் | 21 | ரெங்கநாதபுரம் தெரு |
| 10 | இராமகிருஷ்ணாபுரம் வடக்குத் தெரு | 22 | கம்மாப்பட்டித் தெரு |
| 11 | மாரியம்மன் கோவில் செக்கடித் தெரு | 23 | மேட்டுத் தெரு |
| 12 | மாரியம்மன் கோவில் செக்கடி தெரு (முருகன் கோவில் பின்புறம் பகுதி) | 24 | கற்பக விநாயகர் கோவில் தெரு |
| | | 25 | சந்தியக் கிணறு தெரு |

**அலுவலகக்குறிப்பு:-** அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2906/2020/E1

**பொருள் எண் : 563**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய மரச்சாமான்கள் பழைய குடியிருப்புக்கள் மற்றும் கட்டிடங்கள் இடிக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட மரச்சாமான்கள் ஆகியவற்றை பொறியியல் பிரிவில் இருப்பறையில் வைக்கப்பட்டு பாதுகாப்பில் உள்ளது. மேற்படி மரச்சாமான்களை கொண்டு நகராட்சி அனைத்து பிரிவுகளில் பணியாற்றி வரும் நகராட்சி பணியாளர்களுக்கு தேவைப்படும் மேஜை-9, நாற்காலி-9, அலமாரி-9 போன்றவைகளை தச்சு கூலி அடிப்படையில் தச்சரைக் கொண்டு தயாரித்து கொடுக்க ஏற்படும் செலவினத் தொகை ரூ.1,60,000/- நகராட்சி பொது நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு:-** | அனுமதிக்கலாம். |
| | ந.க.எண் 145/2020/E1 |
| **தீர்மானம் :-** | **அனுமதிக்கப்பட்டது.** |

**ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**2020** ம் ஆண்டு ஜீன் மாதம் **30** ம் நாள் செவ்வாய்கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **சாதாரணக்** கூட்ட நடவடிக்கைகள்.

***முன்னிலை :- திரு. ப. சத்தியநாதன் B.S.C,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 564**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் :- **பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 565**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் :- **பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 566**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர் நல அலுவலர் அவர்களின் ஜீன் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் :- **பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 567**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பகதோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையப் பகுதி மற்றும் நகராட்சி பகுதியில் பெய்யும் மழை அளவை கணக்கீடு செய்வதற்கு திசை காட்டியுடன் கூடிய மழை அளவுமானி ( Rain Gauge With Quartz Clock ) கருவி வாங்குவதற்கான செலவினம் ரூ.28000/- நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3390/2020/E1**

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 568**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பகதோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் மற்றும் நகராட்சி பகுதியில் கிடைக்கப் பெறும் தண்ணீரின் தன்மையை பரிசோதனை செய்வதற்கான நீர் பரிசோதனை கருவி ( Water Testing Kids) வாங்குவதற்கான செலவினம் ரூ.10500/- நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3390/1-2020/E1**

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 569**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN-67-K- 4747 க்கு ( Auto ) 04.08.2020 உடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட வாகனத்திற்கு காப்பீடு 05.08.2020 முதல் 04.08.2021 வரை புதுப்பிக்க ஆகும் செலவு தொகை ரூ.6029/ ( ஆறாயிரத்து இருபத்தி ஒன்பது மட்டும் ) யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்க்கு செலுத்த மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு** :- 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

( ந. க. எண் 4036/2013/ H 2)

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 570**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN-67-AZ-1287 க்கு தகுதிச் சான்று பெறும் பணிக்கு தற்போது புதிதாக அரசு அறிவித்தபடி வண்டி எண் TN-67-AZ-1287 க்கு எலக்ட்ரானிக் வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6000/-க்கு ( ஆறாயிரம் மட்டும் ) மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

( ந. க. எண் 2127/2020/ H 2)

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 571**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN-67-AX-5009 க்கு ( டிப்பர் லாரி ) தகுதிச் சான்று பெறும் பணிக்கு தற்போது புதிதாக அரசு அறிவித்தன்படி வண்டி எண் TN-67-AZ-5009 க்கு எலக்ட்ரானிக் வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9000/ க்கு ( ஒன்பதாயிரம் மட்டும் ) மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

( ந. க. எண் 2237/2020/ H 2)

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 572**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியில் பிரிவில் இயங்கி வரும் 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட மினி டேங்கர் லாரி TN-67-V-1954 வாகனத் தகுதிச் சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுது நீக்கப் பணியை ரூ.65000/- மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 1306/2020/E1**

தீர்மானம் :- **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 573</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண்25, தெற்குரதவீதி , கதவு எண் 109, குடிநீர் இணைப்பு எண் 130/12230 ல் உள்ள குடிநீர் இணைப்பு குழாய் 2017-18 ம் ஆண்டு முதல் பயன்படுத்தாமல் உள்ளதால் குடிநீர் இணைப்பை துண்டிக்க விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதன்படி, குடிநீர் இணைப்பு எண் 130/12230 ஐ நகராட்சி சட்டம் 1920 பிரிவு 134 (பி) ன் படி குடிநீர் இணைப்பை துண்டிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2267/2020/E2**

<u>தீர்மானம் :-</u> **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 574</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மூலம் **33** வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்கை என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை நகராட்சி நுண் உரக்கூடம் ( Compost Yard) மூலம் உரக்கலவை தயாரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் உரக்கலவையை, அரசாணை எண் 210, நாள் 21.06.2002 ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு** :- 1) அனுமதிக்கலாம்.

2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

<u>தீர்மானம் :-</u> **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 575</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 9, ஆடுவதைக் கூடம் ( Slaughter House ) 2020-21 ம் ஆண்டிற்கான உரிமம் புதுப்பித்தலுக்கான தொகை ரூ.12000/- ( ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும் ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் விருதுநகர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் முன் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு** :- 1) அனுமதிக்கலாம்.

2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

( ந. க. எண் 2274/2020/ H 1)

<u>தீர்மானம் :-</u> **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 576</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 33 வார்டுகளிலும் தற்போது 2592 எண்ணம் தெரு விளக்குகள் பயன்பாட்டில் உள்ளது அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| வரிசை எண் | விளக்குகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 1832 |
| 2 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 82 |
| 3 | 150 வாட்ஸ் மெட்டல் ஹலேடு விளக்கு | 101 |
| 4 | 144 வாட்ஸ் சி.எப்.எல். விளக்கு | 200 |
| 5 | 72 வாட்ஸ் சி.எப்.எல். விளக்கு | 30 |
| 6 | 36 வாட்ஸ் சி.எப்.எல். விளக்கு | 286 |
| 7 | 400 வாட்ஸ் மெட்டல் ஹலேடு விளக்கு | 27 3 உயர் அழுத்த மின் விளக்குகள்) |
| 8 | 400 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 9 ( 1 உயர் அழுத்த மின் விளக்குகள்) |
| 9 | 90 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு. | 25 ( 5 மினி உயர் அழுத்த மின் விளக்குகள்) |

இந்நகராட்சியில் உள்ள தெரு விளக்குகளை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் காலம் மார்ச் 2020 ல் முடிவடைந்து விட்டது. எனவே மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தெரு விளக்குகளை ஆண்டு பராமரிப்பு பணியை தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் வரை அல்லது மூன்று மாதங்கள் வரை ( 01.04.2020 முதல் 30.06.2020 ) இந்நகராட்சியில் ஏற்கனவே மேற்படி பணியை மேற்கொண்டு வரும் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதத்தில் தொடர்ந்து தெருவிளக்குகள் பராமரிப்பு பணியை மேற்கொள்வதற்கு கால நீட்டிப்பு வழங்கி நகர்மன்றத் தீர்மான எண் 432 நாள் 28.02.2020ல் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு 30.06.2020 ல் கால நீட்டிப்பு முடிவடைகிறது. இந்நிலையில் தற்போது கொரோனா 2019 பொது ஊரடங்கு காரணமாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை நேர்முக கடித எண் 5437/J2/2020-19, Dated: 29.04.2020 சுற்றறிக்கையின்படி கொரோனா 2019 காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வழிமுறையின்படி அத்தியாவசிய பணிகளில் ஒன்றான தெருவிளக்கு பராமரிப்பு தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சியில் தற்போது மேற்படி பணியை மேற்கொண்டு வரும் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதத்தில் தொடர்ந்து தெருவிளக்குகள் பராமரிப்பு பணியை 01.07.2020 முதல் 31.12.2020 முடிய மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.
**ந.க.எண் 0288/2020/E1**

<u>தீர்மானம் :-</u> **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 577</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள 10.00 இலட்ச கொள்ளளவு கொண்ட தொட்டி குடிநீர் பகிர்மான மெயின் குழாயின் அடைப்பை சரி செய்ய Supply and delivery of 350 mm SS Spindle as per sample and lathe works including GST etc complete லேத் உட்பட ரூ.12500/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 26.05.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 01.06.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Sree Deepana Enterises,<br>236-A Tiruchendur Road, Palayamkottai. | 13900/- |
| 2 | Sri Royal Electricals,<br>73 H/A Ramakrishnapuram Bye pass road,<br>Srivilliputtur. | 12450/- |
| 3 | Sri Shunmuga electrical engineering work,<br>1/2 Ettayapuram road extvandipettai,<br>TUTICORIN | 12600/- |

**அலுவலகக்குறிப்பு–** மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.12450/- மதிப்பீட்டு தொகை விலை விகிதத்தில் குறைவாக Sri Royal Electricals தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 1910-2/2020/இ1**

<u>தீர்மானம் :-</u> **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 578**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN-67-Z-1287 ( டம்பர் பின் ) க்கு தகுதிச் சான்று மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் நாள் 26.05.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 11.06.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

| | | விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **வேலைகளின் விபரம்** | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and co-op centre, Srivilliputtur. | SP.SPL 177, Rajapalayam Agro Engg service and co-op centre, Rajapalayam. | Sp.Spl.166, வத்திராயிருப்பு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிட், வத்திராயிருப்பு 626132. |

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மூன்றுவிலைப்புள்ளிகளில் ரூ.61800/- கொடுத்துள்ள RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

Roc. No. 2127/2020/H2

**தீர்மானம் :-** **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 579**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண் TN-67-K-5862 வாகனத்திற்கு பழைய பேட்டரியை எடுத்துக் கொண்டு புதிய EXIDE 12 v AH 70 v Ah பேட்டரி விநியோகம் செய்யும் பணியை ரூ.8500/- மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 15.06.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்படி வேலைக்கு 17.06.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ | பழைய பேட்டரி எடுத்துக் கொள்ளும் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>3/13, மெயின் ரோடு, சாத்தூர். | 7900/- | 900/- |
| 2 | கவிராஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ்,<br>பேருந்து நிலையம் அருகில்,<br>503, மெயின் ரோடு, சாத்தூர். | 8400/- | 600/- |
| 3 | ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ்,<br>59, வெம்பக்கோட்டை ரோடு, சாத்தூர். | 8200/- | 850/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.7900/- குறைவான விலை விகிதம் மற்றும் பழைய பேட்டரியை ரூ.900/- அதிக விலையில் எடுத்துக் கொள்ள ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் சாத்தூர் நிறுவனம் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**Roc.No.2932/2020/E1**

**தீர்மானம் :-** **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 580</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் நிதி 2020-21 ன் கீழ் செண்பகதோப்பு தலைமை தண்ணீர் நீரேற்று நிலையம் மற்றும் கோட்டைப்பட்டி மேல்நிலை தொட்டி, நகராட்சி அலுவலக மேல்நிலை தொட்டி ஆகிய இடங்களில் குடிநீர் மேம்பாட்டு 6 பணிகள் மேற்கொள்ள மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாவட்ட அளவிலான தினசரி நாளிதழில் 24.05.2020 அன்று விளம்பர மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விளம்பரம் மேற்கொண்ட இந்து தமிழ் நாளிதழுக்கு விளம்பரக் கட்டணம் ரூ.10800/- ஐ தி இந்து ( தமிழ் ) நாளிதழ் ஸ்ரீ விநோத் ஏஜென்ஸி ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.
**ந.க.எண் 1987/2020/E1**

<u>தீர்மானம் :-</u> **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 581</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வளாகத்தில் வடக்கு பக்கம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் 4.00 இலட்ச கொள்ளளவு கொண்ட தரை மட்ட தொட்டியின் உட்புறம் சுத்தம் செய்யும் பணியை ரூ.30000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 20.05.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 22.05.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்ககப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு. வி. அழகர்ராஜ்,<br>M/s AVK கன்ஸ்ட்ரக்சன், நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>405/B2, மாரியம்மன் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 30000/- மதிப்பீட்டு தொகையில் |
| 2 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஸன்,<br>69, மேலரதவீதி, அழகுத் தேவர் காம்ப்ளக்ஸ்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 35000/- |
| 3 | AK கன்ஸ்ட்ரக்சன்,<br>5/82, பஜனை கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 40000/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.30000/- மதிப்பீட்டு தொகை விலை விகிதத்தில் குறைவாக திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தக்காரர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
**Roc.No.1910/2/2020/E1**

<u>தீர்மானம் :-</u> **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 582</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள 10.00 இலட்ச கொள்ளளவு கொண்ட தொட்டி குடிநீர் பகிர்மான மெயின் குழாயில் ஏற்பட்ட கசீவை சரி செய்யும் பணியை ரூ.30000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 28.04.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 30.04.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்ககப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு. வி. அழகர்ராஜ்,<br>M/s AVK கன்ஸ்ட்ரக்சன், நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>405/B2, மாரியம்மன் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 30000/- மதிப்பீட்டு தொகையில் |
| 2 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஸன்,<br>69, மேலரதவீதி, அழகுத் தேவர் காம்ப்ளக்ஸ்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 36000/- |
| 3 | AK கன்ஸ்ட்ரக்சன்,<br>5/82, பஜனை கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 40000/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.30000/- மதிப்பீட்டு தொகை விலை விகிதத்தில் குறைவாக திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தக்காரர் தந்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**Roc.No.1910/1/2020/E1**

தீர்மானம் :- **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 583**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மூலம் 33 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து அவ்வாறு தரம் பிரிக்கப்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை, நுண் உரக்கிடங்கு ( Compost Yard ) நுண் உயர் குடில் (MCC) கொண்டு செல்லும் குப்பை லோடு வாகனங்களை எடை போட்டு கொடுக்க 01.07.2020 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50000/- ( ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு:-** | 1) அனுமதிக்கலாம்.<br>2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண் 9/2020/H1** |
| **தீர்மானம் :-** | **அனுமதிக்கப்பட்டது.** |

**பொருள் எண் : 584**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் தற்போது தண்ணீர் மட்டம் 150 அடிக்கு மேல் உள்ளதாலும் மழைப்பொழிவு குறைவாகி வருவதாலும், மழை பொழிவு காலத்தில் பெய்யும் மழையை நகரில் உள்ள பயன்படாத 1) மங்காபுரம் 2) அய்யம்பட்டித் தெரு 3) பெருமாள்பட்டி வெங்கடேஸ்வரபுரம் தெரு 4) பெருமாள்பட்டி பிள்ளையார் கோவில் தெரு 5) ஆராய்ச்சிபட்டி பிள்ளையார் கோவில் தெரு 6) தைக்கப்பட்டித் தெரு 7) ரைட்டன்பட்டி (வ.உ.சி நகர்) 8) ரைட்டன்பட்டி மெயின் ரோடு 9) அசோக் நகர் 10) இராமகிருஷ்ணாபுரம் வடக்கு தெரு 11) மாரியம்மன் கோவில் செக்கடித் தெரு 12) மாரியம்மன் கோவில் செக்கடித் தெரு முருகன் கோவில் பின்புறம் பகுதி 13) மாரியம்மன் கோவில் கிழக்கு பகுதி 14) மாரியம்மன் கோவில் தெரு 15) கல்லரை தெரு 16) டி.டி. ரோடு 17) என்.ஜி.ஓ. காலனி 18) ஊரணிப்பட்டி தெரு 19) கூனங்குளம் புது தெரு 20) கந்தாடைத் தெரு 21) ரெங்கநாதபுரம் தெரு 22) சந்திய கிணறு தெரு 23) மேட்டு தெரு 24) கற்பக விநாயகர் கோவில் தெரு 25) சந்திய கிணறு தெரு ஆகிய 25 எண்ணிக்கையுள்ள ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணியை ரூ.4,60,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் 562 நாள் 12.062020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 26.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர், மேட்டுத் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.05% குறைவு |
| 2 | திரு. அ. சடையப்பன்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>4, செட்டியக்குடித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 4.30% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. அ. பாபு ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந. க. எண் 2906/2020/E1**

தீர்மானம் :- **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 585**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அசோக் நகர் பகுதியில் தற்போது சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் சாலை பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அத்தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லை, எனவே அமைக்கும் சாலையை மீண்டும் சேதப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளவும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்படி தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் புதியதாக ரூ.3,00,000/- இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 560 நாள் 12.06.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 26.06.2020 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் | விலை குறைப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு. சி. குழந்தைவேலு,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>1/210 நடுத் தெரு ஜமீன் கொல்லன் கொண்டான் தெரு,இராஜபாளையம். | 0.01 % அதிகம் | 0.79 % அதிகம் |
| 2 | ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>361/1 முடங்கியார் தெரு,<br>இராஜபாளையம். | 0.79 % அதிகம் | 0.07 % குறைவு |

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :-** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.01 % அதிகம் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி தந்துள்ளதால் ஸ்ரீ சரவாணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் இராஜபாளையம் ஒப்பந்தக்காரருக்கு விலை குறைப்பு சம்மதக் கடிதம் அளிக்க அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 0.07% குறைவாக விலைவிகிதம் குறிப்பிட்டு 29.06.2020 ம் தேதிய கடிதத்தில் ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் இராஜபாளையம் ஒப்பந்தக்காரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| | ந.க.எண் 2842/2020/E1 |
| தீர்மானம் :- | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.** |

**<u>பொருள் எண் : 586</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் திறந்த வெளி கிணறு எண் 6 க்கு Stand by Motor புதியதாக 5 Hp சப்மெர்சிபிள் மோட்டார் 1 எண்ணம் விநியோகம் செய்யும் பணியை ரூ.35000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 29.06.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 30.06.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. எம். முத்துராமகிருஷ்ணன்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>24/1/1 பெருமாள்பட்டி பிள்ளைமார் சந்து மேலத் தெரு<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 33981/- |
| 2 | செல்வம் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>125-H கான்வென்ட் காம்ளக்ஸ்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 35000/- |
| 3 | திரு. கே. தங்கவேல்,<br>ஒப்பந்தக்காரர், கொத்தன் குளம்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா. | 35700/- |

**அலுவலகக்குறிப்பு:-** அ ) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.33981/- திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஒப்பந்தக்காரர் அளித்துள்ள விலைப்புள்ளியை குடிநீர் பணி அவசரஅவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ஆ ) கிணறு **6** க்கு இயங்கி வந்த மின் மோட்டார் பழுதானதால் குடிநீர் அவசியம் கருதி உடன் Stand by யாக ஒரு 5 H.P மின் மோட்டார் வாங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்க.

**ந.க.எண் 2842-1/2020/E1**

**<u>தீர்மானம் :-</u>** **குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 587</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பணியாளர்களுக்கு குழு காப்பீட்டு திட்டத்திற்கு நபர் ஒருவருக்கு நகராட்சி பங்கு தொகையாக ரூ.55/- வீதம் பிடித்தம் செய்து அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு வருகிறது. ( Finance Pension Department ) அரசாணை எண் 212 நாள் 19.07.2016 ல் வெளியிடப்பட்ட அரசாணையில் நகராட்சி பங்குத் தொகையாக நபர் ஒருவருக்கு ரூ.165/- வீதம் பிடித்தம் செய்து அதனை உரிய அரசு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி 01.04.2016 முதல் 31.03.2020 வரை காலத்திற்கு ரூ.165/- வீதம் நகராட்சி பங்குத் தொகையினை அரசு தலைப்பில் செலுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3555/2010/C2**

**<u>தீர்மானம் :-</u>** **அனுமதிக்கப்பட்டது.**